**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.255/2020**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 3 |
| Name | : Thiru.Kasi |
| Father's Name | : வேம்புலி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2021.

**முதல் விசாரணை -**

நான் வண்டலூரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வழக்கில் காயம்பட்ட வேலு என்னுடைய மகன் ஆவார். கடந்த 22.03.2019 அன்று இரவு பானிபூரி கடைக்கு சென்று வருவதாக சொல்லிவிட்டு என்னுடைய மகன் வேலு சென்றார். திரும்பி வந்தவுடன் 2 நபர்களில் ஒருவர் உயரமாக இருந்ததாகவும், மற்றொருவர் குண்டாக இருந்ததாகவும் இருவரும் லுங்கி கட்டியிருந்ததாகவும் அந்த இருவரும் தன்னுடைய மகனிடம் பணம் கேட்டதாகவும் எனது மகன் என்னிடம் சொன்னார். பணம் கேட்டதாகவும் பணம் இல்லை என்று சொன்னதால் எனது மகனின் கழுத்தில் இருந்த தங்க செயினை அறுத்துவிட்டதாக எனது மகன் சொன்னார். அப்பொழுது இரவு 08.00 மணியிலிருந்து 09.00 மணியிருக்கும். எனது மகன் கையில் காயம் இருந்தது, எந்த கையில் என்பது எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் இது சம்பந்தமாக ஓட்டேரி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். மறுநாள் காலை போலிசார் காவல் நிலையம் விசாரணைக்கு வரச்சொன்னார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். பணம் கேட்ட நபர்கள் கைக்குட்டையால் முகத்தை முடியிருந்ததாக எனது மகன் என்னிடம் தெரிவித்தார்.

**குறுக்கு விசாரணை –**

காவல் நிலையத்திற்கு எனது மகனை அழைத்துச் சென்று அங்கு வைத்துதான் புகார் எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். புகாரைப்பற்றி காவல் நிலையத்தில் போலிசார்

விசாரித்தார்கள் என்றால் ஆமாம். புகாரை போலிசார் எழுதினார்கள். அதில் வேலு கையெழுத்து போட்டார். சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் தொலைந்து போன நகையை மீட்பதற்காக பொய்யான ஒரு புகாரை கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னாலும் அது சரியல்ல.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.255/2020**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 4 |
| Name | : Thiru.Lingaraj |
| Father's Name | : சண்முகம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2021.

**முதல் விசாரணை -**

நான் புதுபெருங்களத்தூரில் வசித்து வருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 13.03.2019 அன்று எனக்கு போன் மூலமாக தகவல் வந்தது. என்னுடைய மைத்துனர் வேலு வண்டலூரில் உள்ள பானிபூரி கடையில் சண்டை நடந்ததாகவும் எனது மைத்துனர் அணிந்திருந்த செயினை அறுத்து விட்டதாகவும், அவரை அடித்துவிட்டதாகவும் தகவல் சொன்னார். மறுநாள் காலை நான் காவல் நிலையம் சென்றேன். அங்கு வைத்து ஆவணத்தில் கையெழுத்து பெற்றார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள எந்த கையெழுத்தும் என்னுடையது இல்லை. போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்யவில்லை.

**இந்நிலையில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் எனது போலிஸ் விசாரணையில் கடந்த 22.03.2019 அன்று இரவு நானும் சந்திரசேகரன் என்பவரும் வண்டலூர் பேருந்து நிலையத்திற்கு வந்தபொழுது அங்கு ஓட்டேரி காவல் நிலைய ஆய்வாளர் மேற்படி தினத்தன்று இரவு சுமார் 08.30 மணிக்கு நடந்த வழிப்பறி வழக்கு சம்பந்தமாக விசாரித்துக் கொண்டிருந்தார். அதற்காக அவர் தயார் செய்த பார்வை

மகசருக்கு சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டதன் பேரில் நானும் மேற்படி சந்திரசேகரன் என்பவரும் கையெழுத்திட்டோம் என்று போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு விட்டு தற்பொழுது எதிரிகளை காப்பாற்றும் நோக்கத்தோடு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**குறுக்கு விசாரணை -** இல்லை.

Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.